<u>DEPOSITION OF WITNESS</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.53/2023 | Date | : 05.03.2024 |
| Deposition of Witness for | : அ.சா.1 | Taluk | : சங்ககிரி |
| Name | : சுப்ரமணி | Calling | : விவசாயம் |
| Father / Husband Name | : | Religion | : இந்து |
| Village | : அத்திமரக்காடு | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 05.03.2024.

<u>(எதிரி ஆஜர் .எதிரியின் வழக்கறிஞர் ஆஜர்.</u>

**<u>அரசு தரப்பு முதல் விசாரணை :</u>**

1. நான் பொன்னம்பாளையம் அத்திமரக்காட்டில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரி சின்னதுரை என்னுடைய பங்காளி ஆவார். சுமார் 1 -1/2 வருடத்திற்கு முன்பாக சின்னதுரை அவருடைய அப்பா பழனிசாமிக்கும் சொந்தமான விவசாய பூமியை அவர் நிரவி வந்தார். அப்போது 6 மணி இருக்கும் நிலத்திலிருந்த 3 அடி தடத்தையும் நிரவியதால் ஏன் தடத்தை நிரவுகிறீர்கள் என்று கேட்டேன் அதற்கு ஏண்டா தேவடியா பையா பத்திரத்தில் இருந்தால் அதை கொண்டு வா உனக்கு தடம் எங்கே இருக்கிறது என்று கேட்டார். பின்னர் நான் வந்து விட்டேன். மறுநாள் காலை 10 மணியளவில் நான் எங்களுடைய விவசாய நிலத்தில் என்னுடைய மகன் தனசேகரனுடன் சேர்ந்து வெண்டைக்காய் பறித்து

கொண்டிருந்தோம். நானும் என்னுடைய மகனும் எதிர்எதிர் திசையில் வெண்டைக்காய் பறித்து கொண்டிருந்தோம்.

2. சின்னதுரை அவருடைய நிலத்தில் டிராக்டரை ஓட்டி கொண்டிருந்தார். அப்போது என்னுடைய மகன் அப்பா டிராக்டர் வருகிறது என சத்தம் போட்டார். எனக்கு காது சற்று மந்தமாகத்தான் கேட்கும். என்னுடைய மகனின் சத்தத்தை கேட்டதும் நிமிர்ந்து பார்த்தேன் அப்போது டிராக்டரின் பம்பர் என் மீது மோதி நான் கீழே விழுந்து விட்டேன். பின்னர் டிராக்டரின் முன்சக்கரம் எனது வலது தோள்பட்டையில் ஏறியது அதனால் எனக்கு வலது தோள்பட்டையிலும்,நுரையீரல் எலும்பிலும் எலும்பு முறிவு ஏற்பட்டது. தலையிலும் அடிப்பட்டது. ( சாட்சி வலது தோள்பட்டையை காண்பித்தார். அவரது வலது தோள்பட்டையில் காயத்தழும்பு இருந்தது.) ஆஜர் எதிரி டிராக்டரை அந்த இடத்திலேயே விட்டுவிட்டு ஓடிவிட்டார்.

3. பின்னர் என்னுடைய மகன் பவானியிலுள்ள தனியார் மருத்துவமனையில் என்னை சேர்த்தார். அங்கு போலீசார் என்னிடம் வந்து விசாரித்து வாக்குமூலம் பெற்று கொண்டார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். (**புகார் வாக்குமூலம் அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) சம்பவ இடத்தில் சம்பவத்தின்போது என்னுடைய மகனுடன் செந்தில் என்ற நபரும் இருந்தார். என் மீது மோதிய டிராக்டர் சிவப்பு கலரில் இருந்தது.அதை பார்த்தால் என்னால் அடையாளம் காண்பிக்க முடியும் . தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்திலுள்ள

டிராக்டர்தான் என் மீது மோதிய டிராக்டர் ஆகும். ( **புகைப்படத்திலுள்ள TN.34 S 3136 என்ற பதிவெண் கொண்ட டிராக்டர் அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). நான்சுமார் 2 மாதங்கள் உள்நோயாளியாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். தீவிர சிகிச்சை பிரிவில் மட்டும் சுமார் 25 நாட்கள் சிகிச்சை பெற்றேன். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய எதிரி தரப்பிற்கு வாய்ப்பளித்தும் சாட்சியை குறுக்கு விசாரணை செய்யவில்லை.

Sd/-S.R.Babu,

Sd/-Subramani

Judicial Magistrate No.1,

Sankari.

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.53/2023 | Date | : 05.03.2024 |
| Deposition of Witness for | : அ.சா.2 | Taluk | : சங்ககிரி |
| Name | : தனசேகரன் | Calling | : விவசாயம் |
| Father / Husband Name | : | Religion | : இந்து |
| Village | : அத்திமரக்காடு | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 05.03.2024.
(எதிரி ஆஜர் .எதிரியின் வழக்கறிஞர் ஆஜர்.

**அரசு தரப்பு முதல் விசாரணை** :

1) நான் பொன்னம்பாளையம் அத்திமரக்காட்டில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். அசா.1 என்னுடைய அப்பா ஆவார். ஆஜர் எதிரி என்னுடைய பங்காளி ஆவார். கடந்த 04.10.2022 ம் தேதி மாலை 6 மணியளவில் கிணற்றிலிருந்து வீட்டிற்கு தண்ணீர் எடுத்து வர சென்றபோது எதிரி சின்னதுரையும், அவருடைய அப்பா பழனிசாமியும் அவர்களுடைய விவசாய நிலத்தை நிரவி கொண்டிருந்தனர். அப்போது 3 அடி தடத்தையும் நிரவியதால் என்னுடைய அப்பா ஏன் நிறவுகிறீர்கள் என்று கேட்டதற்கு எதிரி சின்னதுரை தேவடியா பையா உனக்கு எங்கே தடம் உள்ளது தடம் இருந்தால் பத்திரத்தை கொண்டு வா என்று திட்டியதாக வீட்டிற்கு வந்து சொன்னார்.

2) மறுநாள் காலை 10 மணிக்கு எங்களுடைய விவசாய நிலத்தில் நானும், என்னுடைய அப்பாவும் வெண்டைக்காய் பறித்து கொண்டிருந்தோம். அப்போது சின்னதுரை அவருடைய நிலத்தில் டிராக்டிரில் உழுது கொண்டிருந்தார். திடீரென டிராக்டர் அருகில் வந்ததுபோல் சத்தம் கேட்டது குனிந்து வெண்டைக்காய் பறித்து கொண்டிருந்த நான் நிமிர்ந்து பார்த்தபோது டிராக்டர் என் அருகிலேயே வந்தது நான் நகர்ந்து கொண்டேன். என்னுடைய அப்பா எனக்கு எதிர் திசையில் வெண்டைக்காய் பறித்து கொண்டிருந்தார் நான் அப்பா டிராக்டர் வருகிறது என்று சத்தம் போட்டேன் சத்தம் போடும்போதே என்னுடைய அப்பா நிமிர்வதற்குள் டிராக்டரின் பம்பர் என்னுடைய அப்பாவின் பின்புறம் மோதியது அவர் திரும்பி விழுந்துவிட்டார். அப்போது டிராக்டரின் முன்சக்கரம் என்து அப்பாவின் வலது தோள்பட்டையின் மீது ஏறி சென்றது. பின்னர் எதிரி டிராக்டரை விட்டுவிட்டு எங்களை உயிரோடு விடமாட்டேன் என்று மிரட்டி விட்டு சென்று விட்டார்.

3) என்னுடைய அப்பாவிற்கு தோள்பட்டையில் எலும்பு முறிவு ஏற்பட்டது நெஞ்சு எலும்பில் மூன்று எலும்பு முறிவு ஏற்பட்டு நுரையீரலில் இரண்டு எலும்பு ஏறிவிட்டது. பின்னர் என்னுடைய அப்பாவை ராஜஸ்ரீ மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தோம். அங்கு சுமார் 10 நாட்கள் சிகிச்சையில் இருந்து மூச்சு விடுவதற்கு மிகவும் சிரமமாக இருந்ததால் மேல்சிகிச்சைக்காக ஈரோடு மணியன் மருத்துவமனையில் என்னுடைய அப்பாவை சேர்த்தேன். என்னுடைய அப்பாவின் மீது மோதிய டிராக்டர் மகேந்திரா 595 ஆகும் அது சிவப்பு கலர் டிராக்டர் ஆகும்.

என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் ( அசா.பொ.1) உள்ள டிராக்டரில் தான் எதிரி என் அப்பாவை மோதினார். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

## குறுக்கு விசாரணை

சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய எதிரி தரப்பிற்கு வாய்ப்பளித்தும் சாட்சியை குறுக்கு விசாரணை செய்யவில்லை.

Sd/-S.R.Babu,

Sd/-Dhanasekaran

Judicial Magistrate No.1,

Sankari.

<u>DEPOSITION OF WITNESS</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.53/2023 | Date | : 05.03.2024 |
| Deposition of Witness for | : அ.சா.3 | Taluk | : சங்ககிரி |
| Name | : செந்தில் | Calling | : வாட்டர் சப்ளை |
| Father / Husband Name | : | Religion | : இந்து |
| Village | : மெய்யன்தெரு | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 05.03.2024.

<u>(எதிரி ஆஜர் .எதிரியின் வழக்கறிஞர் ஆஜர்.</u>

<u>**அரசு தரப்பு முதல் விசாரணை** :</u>

1) நான் பொன்னம்பாளையம் மெய்யன்தெருவில் குடியிருந்து வாட்டர் சப்ளை தொழில் செய்து வருகிறேன். அசா,1 சுப்ரமணி என்னுடைய சித்தப்பா ஆவார். ஆஜர் எதிரி என்னுடைய பங்காளி மற்றும் பக்கத்து தோட்டத்துக்காரர் ஆவார். எதிரி சின்னதுரையும் அவருடைய அப்பா பழனிசாமியும் அவருடைய விவசாய நிலத்தை ஒரு வாரமாக நிரவி கொண்டிருந்தனர். அப்போது கிணற்றுக்கு போகும் 3 அடி அகல தடம் சம்பந்தமாக வாக்குவாதம் ஏற்பட்டது என்று கேள்விப்பட்டேன். மறுநாள் 05.10.2022 ம் தேதி சுப்ரமணியமும் தனசேகரனும் காலை 10 மணியளவில் அவருடைய தோட்டத்தில் வெண்டைக்காய் பறித்து கொண்டிருந்தார்கள்.

2) அவர்கள் வெண்டைக்காய் பறித்து கொண்டிருந்த இடத்திலிருந்து சுமார் 20 தொலைவில் உள்ள எனது நிலத்தில் பருத்தி எடுத்துக் கொண்டிருந்தேன். சின்னதுரை

அவருடைய நிலத்தை உழவு செய்து கொண்டிருந்தார். நான் திரும்பி பார்த்தபோது சின்னதுரையின் டிராக்டர் வெண்டைக்காய் நிலத்திற்கு சென்று விட்டது. நான் உடனே அருகே சென்று பார்த்தபோது தனசேகர் டிராக்டரின் முன்சக்கரத்திற்கும் பின்சக்கரத்திற்கும் இடையே மாட்டிக் கொண்டிருந்த அவருடைய அப்பா சுப்ரமணியத்தை இழுத்து கொண்டிருந்தார். சுப்ரமணியத்தின் வலது தோள்பட்டையின் மீது டிராக்டரின் முன் சக்கரம் ஏறி இறங்கியிருந்தது எதிரி டிராக்டரிலிருந்து இறங்கி சுப்ரமணியத்தையும் தனசேகரனையும் பார்த்து செத்து தொலைங்கடா தேவடியா பையா என்று கூறி ஓடிவிட்டார்.

3) பின்னர் சுப்ரமணியத்தை மருத்துவமனையில் சேர்த்தனர். எதிரி ஓட்டிய டிராக்டர் சிவப்பு கலர் மகேந்திரா டிராக்டர் ஆகும். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்திலுள்ள டிராக்டர்தான் ( அ.சா.பொ.1) எதிரி வெண்டைக்காய் நிலத்திற்குள் ஓட்டி வந்து சுப்ரமணியத்தின் மீது மோதிய டிராக்டர் ஆகும். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>**குறுக்கு விசாரணை**</u>

சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய எதிரி தரப்பிற்கு வாய்ப்பளித்தும் சாட்சியை குறுக்கு விசாரணை செய்யவில்லை.

Sd/-S.R.Babu,

Sd/-Senthil

Judicial Magistrate No.1,

Sankari.